மீண்டும் கேரள அரசாங்கத்திடமிருந்து மின்சாரம் பெறவும் நாம் அலுமினியம் தருவதற்கும் இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமபுந்திரன் தலைவர் அவர்களே, இதற்கு இந்திய அரசின் அனுமதி தேவையில்ல.

திரு. ச. செம்மலை மாண்புமிகு பேரவைத் தலைவர்களே இப்படி ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மினசாரம் பரிவர்த்தனன செய்கிறபோது மின்சாரத்திற்காக பற்றாக்குறை மாநிலங்கள், உபரி மாநிலங்களுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. அதேபோல் சில சமயங்களில் தமிழ்நாட்டைப் போன்ற பற்றாக்குறை மாநிலங்கள் உபரி மாநிலங்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சாரம் கொடுக்கிறபோது, குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. எனவே இந்த மின்சாரம் பரிமாற்றம் செய்து கொள்கிற போது ஒரே சீரான விலையை நிர்ணயம் செய்ய மத்திய அரசை நமது அரசு வற்புறுத்தி வந்ததே, அப்படி சீரான விலை நிர்ணயம் செய்வதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே பொதுவக இயற்கை வளங்கள் குறைந்த தமிழ்நாடு போன்ற பற்றாக்குறை மாநிலங்களுக்கு மின்சாரம் தருகிறபோது ஒரு விஞ்ஞான அடிப்படையில் அதை அமைக்க வேண்டும் என்று மின் சாரத்துறை அமைச்சர்கள் இந்தியா முழுவதற்கும் ஒரு சீரான கட்டணத்தை அவர்கள் வசூலிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இவைகள் எல்லாம் ஆலோசனைகளாக இருக்கிறதே தவிர, முடிவுகள் எடுக்கப்படவில்லை.

தெரு விளக்குகளில் 'Thermister' என்னும் சாதனத்தைப் பொருத்தும் திட்டம்.

*101-*வினா* எண் 18992: திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— (அ) தமிழகத்தில் தெரு விளக்குகள் பியூஸ் போவதைக் குறைத்திட ஒவ்வொரு விளக்கிலும் ''Thermister' எனும் சாதனத்தைப் பொருத்துவதைப் பற்றி மின்துறை ஆய்வு நடத்தியதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ, ஆ) ஒரு மாதிரி 'தெர்மிஸ்டர்'—ஐப்பயன்படுத்தி ஆய்வு செய்ததில், இதனால் மின் இழப்பு ஏற்படுவதுடன் மின்விளக்கும் சீரின்றி நிலையற்ற ஒளியுடன் எரிந்தது, முறையான வெளிச்சம் தர இது உகந்த தல்ல. எனவே இச்சாதனத்தைப் பயன்படுத்துவது உசிதமல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது.

[1984 பிப்ரவரி 21]

திரு வேடசந்தூர் வ்.பி. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரு விளக்குகள் fuse போவதைத் தடுப்பதற்கு தெர்மிஸ்டர் என்ற சாதனம் அவ்வளவு பயனுள்ளது அல்ல என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது கிராமங்களில் இருக்கக்கூடிய தெரு விளக்குகள் எல்லாம் உருண்டை வடிவில் உள்ள விளக்குகள் தான். அவைகள் அடிக்கடி fuse போய்விடுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு குழல் விளக்குகள் போட வேண்டும் என்று ஊராட்சி மன்றங்கள் மின்துறையைக் கேட்டபோது, ஊராட்சி மன்றங்கள் மின் துறைக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக தெரு விளக்குகளை மாற்றுவது மறுக்கப்படுகிறது. ஆகவே ஊராட்சி மன்றங்களுக்கு அந்த பழைய பாக்கிய கட்டுவதிலேயிருந்து விதி விலக்கு அளித்து, எல்லா கிராமங்களுக்கும் குழல் விளக்குகள் பொருத்த மின் துறை அந்த விதியை, தளர்த்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, குழல் விளக்குகளைப் பொருத்துவது நல்லது தான். ஆனால் அந்த விதிகளைத் தளர்த்துவதென்பது நிதியைத் தளர்த்துவது ஆகும். ஏற்கனவே மின் வாரியம் நிதிப் பற்றாக்குறையாக இருக்கும் பொழுது, இந்த முடிவை மேற்கொள்வது இயலாது.

திரு. ஆர். ரங்கசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வீதி விளக்குகளை நாளடைவில் குழல் விளக்குகளாக மாற்றுவது என்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், அரசு உத்தரவாதம் அளித்திருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இன்னும் பல பகுதிகளில் அது பாதி அளவு கூட மாற்றப்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே தாளவாடியில் 350 விளக்குகளுக்கு 50 விளக்குகள் தான் மாற்றப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் உடனடியாக குழல் விளக்குகளாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தந்துள்ள தகவல் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அடிப்படையான தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய கடமை அரசிற்கு இருக்கிறது. ஆகவே மக்களுக்குத் தேவையான இந்த மின் விளக்கு வசதிகளை செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பணத்தைக் காலத்தில் செலுத்தவில்லை என்று கூறி, அதற்காக இந்த அடிப்படையான கடமையைச் செய்வதை அரசு நிறுத்தலாமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விளக்கு எரியவேண்டுமென்பது எப்படி ஒரு அடிப்படையான காரியமோ அது போலவே மின்சார வாரியம் இயங்குவது என்பது அடிப்படையான காரியம் என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே மின்சாரவாரியம் இயங்குவதற்கு அவ்வப் பொழுது மின் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு நாம் சலுகை காட்ட வேண்டு மென்பது சரியாக இராது.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, மின் கட்டண பாக்கி இல்லாமல் கட்டிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு சீரான விளக்குகளைப் பொருத்துவதற்கு, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நடவடிக்கை எடுக்கும்

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மின்சார குழல் விளக்குகளை, கிராம நலன் கருதி, தெரு விளக்குகளாக அமைப்பதற்கு 50 சதவீதமாவது ஊராட்சி மன்றங்கள் கட்டினால், கொடுக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, அதாவது பொருளுக்கு கொடுக்கின்ற விலை இது. மின்சார வாரியம் வாங்கும் வரி அல்ல. வரியில் சலுகைகள் உண்டு. ஆனால் ஒரு பொருளை விலைக்கு வாங்கும் போது அதனுடைய விலையை முழுவதும் தந்தாகவேண்டும். ஆகவே இதிலே வாவழக்காய் வியாபாரம் செல்லாது.

Dr. K. SOWIRAJAN: Mr. Speaker, Sir, luckily we have an Engineer as our Hon'ble Minister for Electricity. I do not understand the terminology 'Thermister'. This is something like voltage stabilizer. I understand that all the bulbs fuse often because of the fluctuation in voltages. In that case, is it not possible to find out some other means of keeping the voltage steady so that bulb will not often become fuse?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தொழில்நுட்பம் நிறைந்த கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குச் சரியான முழு விவரங்களையும் சேகரித்து அனுப்பி வைக்கிறேன்.

மேல நெட்டூர் கிராமத்தைச் சேர்ந்த பெரிய கோவில் தேர்

102—*வினா எண் 5358) திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்தைச் சேர்ந்த மேலநெட்டூர் கிராமத்தைச் சேர்ந்த பெரிய கோவில் தேர் பல வருடங்களாக ஓடாமல் இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளதா?